வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4743 /அ3/2023 நாள். .11.2023

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – அரசு மற்றும் நகராட்சி உயர் / மேல்நிலப்பள்ளிகளில் 2023 – 2024 கல்வி ஆண்டில் 01.08.2023 நிலவரப்படி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தது – உபரி பட்டதாரி ஆசிரியர்களை பணிநிரவல் ( Deployment) செய்வது தொடர்பாக இணைப்பில் காணும் ஆசிரியர்களின் விவரங்கள் மற்றும் அதற்குண்டான ஆவணங்கள் ஒப்படைக்க கோருதல் – சார்பு

பார்வை
1. சென்னை-6, பள்ளிக் கல்வி இணைஇயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.48800/சி3/இ1/23 நாள்.4.8.2023, 11.08.2023
2. அரசாணை எண்.176 பள்ளிக், கல்வித் துறை நாள்.17.12.2021
3. அரசாணை எண்.12 பள்ளிக், கல்வித் துறை நாள்.03.02.2022

-----

பார்வை 1 ல் காணும் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 இல் உள்ளபடி 6 முதல் 10 வகுப்புகளில் உள்ள மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டதில் ஆசிரியருடன் உபரி பணியிடங்கள் கண்டறியப்பட்டு இணைப்பில் காணும் ஆசிரியர்களை (Surplus Post with Person) பணிபுரிந்து வரும் பட்டதாரிஆசிரியரை பணிநிரவல் கலந்தாய்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இணைப்பில் காணும் பட்டதாரி ஆசிரியர்களின் விவரங்கள் மற்றும் பணிப்பதிவேடு நகல்கள் அதாவது பட்டதாரி ஆசிரியர் பதவியில் முதன் முதலில் நியமனம் பெற்ற நாள் / தற்போது பணியில் சேர்ந்த பள்ளி மற்றும் நாள் / பணிப்பதிவேடு முதல் பக்க நகல் மேற்காண் அனைத்து ஆவணங்ளுடன் கீழ்க்காணும் படிவத்தினை பூர்த்தி செய்து நாளை 17.11.2023 மு.ப 11.00 மணிக்குள் இவ்வலுவலக அ3 பிரிவில் நேரில் சம்பந்தப்பட்ட ஆசிரியரின் அசல் பணிப்பதிவேட்டுடன் வருமாறு சார்ந்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு தலைமைஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மேலும் மேற்காண் ஆசிரியர்களில்  பணிநிரவல் விதி விலக்கு**

பார்வை 2 மற்றும் 3 ல் காணும் அரசாணையின் படி, 40 % கண்பார்வையற்றவர்கள் , 40% மாற்றுத்திறனாளிகள் மற்றும் NCC பொறுப்பில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எவரேனும் உபரியாக கண்டறிப்பட்டு இருப்பின் அவர்களுக்கு விலக்கு அளித்து அவருக்கு பதிலாக அதே பள்ளியில் அதே பாடத்தில் உள்ள அடுத்த இளையவரை ( Next station Junior ) உபரியாக தெரிவு செய்து அவ்வாசிரியரின் விவரங்களையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது அவ்வாசிரியரையே பணிநிரவலுக்கு கீகழ்க்காணும் நாளில் நடைபெறவுள்ள கலந்தாய்வில் கலந்து கொள்ள ஏதுவாக பணியிலிருத்து விடுவித்து அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த தலைமைஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**பணிநிரவல் கலந்தாய்வு நடைபெறும் நாள் நேரம்**

| | | |
|---|---|---|
| வ.எண் | மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம்,<br>வேலூர்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம், பி பிளாக்<br>மூன்றாம் தளம், சத்துவாச்சாரி .632009 | 20.11.2023<br>காலை 9.00 மணி |

**இணைப்பு**

1. சார்ந்த பள்ளி ஆசிரியர்களின் விவரம்
2. உரிய படிவம்

ஒப்பம்

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்

பெறுநர்

இணைப்பில் காணும் தலைமை ஆசிரியர்கள்,

வேலூர் மாவட்டம்

நகல்

சென்னை- 6 பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.